**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 60/2024**

**Prosecution Witness : 10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ராஜேந்திரன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. சடையாண்டி** | **Calling** | : | |
| **Village** | : | **பண்ணைபட்டி** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **55** |
| | | | **Dated** | : | **11.12.2024** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**Accused present. Both side counsels present.**

**பட்டியல் சாட்சி 11 திரு. ராஜேந்திரன் ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அ.சா. 10 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 08.06.2023ம் தேதி இரவு 08.00 மணி அளவில் நானும், மாயாண்டியும் கொட்டாரபட்டி பிரிவு, கன்னிவாடி அருகே நின்று கொண்டு இருந்தபோது, காவல் துறையினர் காரில் வந்தார்கள். எதிரியை அந்த இடத்தில் வைத்து கைது செய்து, அவரிடம் விசாரித்தனர். அவர்களிடம் ராஜா, சரவணன் என் தயாரை அடித்தவன், நீ எதற்கு அவனை Injection போட்டு கூட்டிக் கொண்டு வந்தாய் என்று சொல்லி, புகழ்நாதனை அடித்ததாக ராஜா கூறினார். அதை ஆய்வாளர் எழுதிக் கொண்டார். அதன் பிறகு என்னிடம் கையெழுத்து வாங்கி கொண்டார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள

முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த ஒப்புதல் வாக்குமூலம் Ex. P9. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

நான் போலீஸ் விசாரணையின் போது 08.06.2023 அன்று தான் விசாரித்ததாக சொன்னேன் என்றால் சரிதான். இறந்து போன புகழ்நாதன் எனது உறவினர் என்றால் சரிதான். கொட்டார பட்டிக்கும், என் வீட்டிற்கும் சுமார் 12-13 கி.மீ. இருக்கும். எனக்கு தோட்டம் அங்கு இருக்கிறது, அதனால் வந்தேன். நான் என்ன விசயமாக வந்து இருக்கிறேன் என போலீஸ் விசாரணையில் சொல்லி இருக்கிறேன். எதிரி ராஜவை அன்றைய தினம் மதியமே காவல் நிலையத்தில் பிடித்து வைத்து இருந்தார்கள் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. நான் செல்வதற்கு முன்பே, எதிரியை போலீசார் பிடித்து வைத்து இருந்தார்கள் என்றும், அதனால் அவர்கள் எதிரியை விசாரித்தது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ளது போல, போலீசார் நான் சொன்ன இடத்தில் வைத்து எதிரியை போலீசார் விசாரிக்கவில்லை என்றும், எதிரி என் முன்னிலையில் எவ்வித வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கி கொண்டார்கள் என்றும், இறந்து போன புகழ்நாதன் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2024.12.11 18:09:25 +0530